001485 11377/2018

சுருக்கம்

பொதுப்பணிகள் – பேரூராட்சிகள் நிர்வாகம் – கோயம்புத்தூர் மாவட்டம் – அவிநாசி பேரூராட்சி – திரு.இரா.மகேஷ்குமார், இளநிலை உதவியாளர் கருணை அடிப்படையில் பணி நியமனம் செய்யப்பட்டது – தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறையின் அரசாணையை தளர்த்தி பணிவரன்முறை செய்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (பேரூ.1) துறை

அரசாணை (3ப) எண்.02 நாள்: 01.02.2021
(திருவள்ளுவர் ஆண்டு 2052
சார்வரி, தை–19)

படிக்க:

1) அரசாணை (நிலை) எண்.560, தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறை, நாள் 03.08.1977.
2) மாவட்ட ஆட்சித் தலைவர் கோயம்புத்தூர் அவர்களின் செயல்முறை ந.க.எண்.4370/2008/பே.2, நாள் 20.02.2009.
3) மாவட்ட ஆட்சித் தலைவர் திருப்பூர் அவர்களின் கடிதம் ந.க.எண்.149(தி) /2014/ ப.2, நாள் 09.07.2014.
4) பேரூராட்சிகள் இயக்குநரின் கடிதம் ந.க.எண்.11426/2012/அ9, நாள் 01.09.2014.
5) அரசாணை (நிலை) எண்.80, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள் 02.03.2016.
6) அரசாணை (நிலை) எண்.100, பணியாளர் மற்றும் நிருவாக சீர்த்திருத்தத் துறை, நாள் 01.08.2018.
7) தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணைய கடிதம் எண்.2871/சிடிபி2/2018, நாள் 20.08.2018.
8) அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள் 23.01.2020.

*****

ஆணை:-

மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சித்தலைவரின் செயல்முறை ஆணையின்படி கோயம்புத்தூர் மாவட்டம், திருமலையாம்பாளையம் பேரூராட்சியில் செயல் அலுவலராகப் பணிபுரிந்து 01.02.2003–ல் பணியிடைக்காலமான திருமதி. பி.எஸ்.பழனாத்தாள் என்பவரது வாரிசுதாரர் திரு. இரா.மகேஷ்குமார் என்பவருக்கு அவிநாசி பேரூராட்சியில், இளநிலை உதவியாளராக கருணை அடிப்படையில் பணி நியமனம் வழங்கப்பட்டு அன்னார் 23.02.2009 முற்பகல் முதல் பணிபுரிந்து வருகிறார்.

2. மேலே நான்காவதாக படிக்கப்பட்ட கடிதத்தில், திரு.இரா.மகேஷ்குமார், இளநிலை உதவியாளர் என்பவரின் பணியினை பணியில் சேர்ந்த நாள் முதல் வரன்முறைப்படுத்த உரிய ஆணையிடுமாறு பேரூராட்சிகளின் இயக்குநர் அரசினை கோரியுள்ளார்.

2022.03.

(TRUE COPY)

Executive Officer
Kannampalayam Town Panchayat
Coimbatore - 641 402.

3. பேரூராட்சிகளின் இயக்குநரின் பிரேரணையினை ஆய்வு செய்ததில், தனியர், கருணை அடிப்படையில் பணி நியமனம் கோரி விண்ணப்பம் அளித்த நாளில் (12.08.2005) இளநிலை உதவியாளர் பதவிக்கான கல்வித்தகுதியினை நிறைவு செய்யாமல் மார்ச் 2008–ல், தேர்ச்சி பெற்றுள்ளார். தனியரின் பணி நியமனமானது மேலே, முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையின் பத்தி 6–ல் கருணை அடிப்படையில் பணி வேண்டி விண்ணப்பிக்கும் போது (Seeking Employment) அப்பணி நியமனத்திற்கு வரையறுக்கப்பட்டுள்ள அனைத்து தகுதிகளையும் பெற்றிருக்க வேண்டும் என்பதற்கு முரணானதாகும்.

4. எனினும், தனியர் பணி வேண்டி விண்ணப்பித்த நாளான 12.08.2005–ல் உரிய கல்வித் தகுதியை நிறைவு செய்யாமல், பணி நியமனம் அளிக்கப்பட்ட நாளான 20.02.2009–க்கு முன்னர் (மார்ச் 2008–ல்) நிறைவு செய்துள்ளமையால், இந்நிகழ்வை சிறப்பினமாக கருதி, மேற்படி அரசாணையினை தனியர் பொருட்டு தளர்வு செய்து தனியரது பணியினை இளநிலை உதவியாளர் பதவியில், அவர் பணியில் சேர்ந்த நாளான 23.02.2009 முற்பகல் முதல் வரன்முறை செய்ய தேர்வாணையத்தின் இசைவு கோரப்பட்டது.

5. மேலே ஏழாவதாக படிக்கப்பட்ட கடிதத்தில் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், மேலே ஆறாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையின்படி, கருணை அடிப்படையில் பணி நியமனம் செய்யப்படும் பணியாளர்களின் பணியினை வரன்முறை செய்வதற்கு தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்தின் இசைவினை பெறும் நடைமுறை கைவிடப்பட்டுள்ளதை குறிப்பிட்டு இந்நேர்வினை திருப்பியது.

6. மேலே எட்டாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், கருணையடிப்படையிலான பணிநியமனம் தொடர்பாக விரிவான வழிகாட்டு நெறிமுறைகள் வெளியிடப்பட்டுள்ளது. அவ்வாணையில் மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் பத்தி–6–ல் தெரிவிக்கப்பட்டுள்ள நிபந்தனையான கருணை அடிப்படையில் பணி நியமனம் கோரும் விண்ணப்பதாரர் அப்பணியிடத்திற்கு தேவையான அனைத்து தகுதிகளையும் பெற்றிருக்க வேண்டும் என பத்தி–4 General(ii)–ல் சேர்த்து ஆணையிடப்பட்டுள்ளது.

7. இந்நிலையில் பேரூராட்சிகளின் இயக்குநரின் கருத்துரு அரசால் நன்கு ஆய்வு செய்யப்பட்டு அதனை ஏற்று, தனியர் பணி வேண்டி விண்ணப்பித்த நாளான 12.08.2005–ல் இளநிலை உதவியாளர் பதவிக்கு உரிய கல்வித் தகுதியை நிறைவு செய்யாமல், பணி நியமனம் அளிக்கப்பட்ட நாளான 20.02.2009–க்கு முன்னர் (மார்ச் 2008–ல்) நிறைவு செய்துள்ளமையால், இந்நிகழ்வை சிறப்பினமாகக் கருதி, அரசாணை(நிலை) எண்.18, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள் 23.01.2020–ல் தெரிவிக்கப்பட்டுள்ள நிபந்தனையான கருணை அடிப்படையில் பணி நியமனம் கோரும் விண்ணப்பதாரர் அப்பணியிடத்திற்கு தேவையான அனைத்துத் தகுதிகளையும் பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனையை தனியர் பொருட்டு தளர்வு செய்து, தனியரது பணியினை இளநிலை உதவியாளர் பதவியில், அவர் பணியில் சேர்ந்த நாளான 23.02.2009 முற்பகல் முதல் அப்பணியிடத்திற்கு தேவையான உடற்தகுதி பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனையுடன் வரன்முறை செய்து அரசு ஆணையிடுகிறது.

8. இவ்வாறு முன்தேதியிட்டு பணிவரன்முறை செய்யப்படுவதால் நடைமுறையிலுள்ள விதிகளின்படி வருடாந்திர ஊதிய உயர்வு மற்றும் நிலுவைத் தொகை ஏதுமிருப்பின் அதனைப்பெற தனியர் தகுதியுடையவராகிறார். இது தொடர்பாக தனியரின் பணிப்பதிவேட்டில் உரிய பதிவுகள் மேற்கொள்ளுமாறு பேரூராட்சிகளின் இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

9. இவ்வாணை, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறையின் அ.சா.எண்.285/CG1/2021, நாள் 07.01.2021 மற்றும் பணியாளர் மற்றும் நிர்வாக

True copy
க.ய[illegible] 6/3
Executive Officer
Kannampalayam Town Panchayat
Coimbatore - 641 402

சீர்த்திருத்தத் துறையின் அ.சா.எண்.919/G1/2021–1, நாள் 21.01.2021 ஆகியவற்றில் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ஹர்மந்தர் சிங்
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்.

பெறுநர்:-

திரு.இரா.மகேஷ்குமார், இளநிலை உதவியாளர்,
அவிநாசி பேரூராட்சி, கோயம்புத்தூர் மாவட்டம்.
(பேரூராட்சிகளின் இயக்குநர் வழியாக).
பேரூராட்சிகளின் இயக்குநர், சென்னை–600 028.
மாவட்ட ஆட்சித் தலைவர், கோயம்புத்தூர் மாவட்டம்.
(பேரூராட்சிகளின் இயக்குநர் வழியாக)
பேரூராட்சிகளின் உதவி இயக்குநர்,
கோயம்புத்தூர் மண்டலம்.
(பேரூராட்சிகளின் இயக்குநர் வழியாக)
இயக்குநர், உள்ளாட்சி நிதி தணிக்கை துறை, சென்னை– 600 035

<u>நகல் :-</u>

அரசு கூடுதல் தலைமைச் செயலாளரின் முதுநிலை தனிச் செயலாளர்,
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, சென்னை – 600 009.
தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (டி.1) துறை, சென்னை – 600 009.
பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் (ஜி.1)துறை, சென்னை – 600 009.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்

ந.க.எண்.11399/வரு/அ6, நாள்:13.02.2021

//அனுப்பப்படுகிறது//

பெறுநர்.
திரு.ரா.மகேஷ்குமார்
ஈரோடு மண்டல பேரூராட்சிகளின்
உதவி இயக்குநர் வழியாக

இயக்குநருக்காக

2/2

2022.03.16

True copy

Executive Officer
Kannampalayam Town Panchayat